2018 ஜூன் 7]

சுகாதார நிலையத்தைப் புதுப்பித்து, அங்கே மீண்டும் ஒரு புதிய கட்டடம் கட்டித் தரப்படுமா என்று மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு அதனை ஆய்வு செய்து, உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *வினா வரிசை எண் 149, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. ஆறுக்குட்டி, மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

149—

புதிய வட்டம்

***2482—திரு. வி.சி. ஆறுக்குட்டி:**

மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் வடக்கு வட்டத்தை இரண்டாகப் பிரித்து துடியலூரைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய வட்டம் உருவாக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், துடியலூரை தலைமையிடமாகக்கொண்டு புதிய வட்டம் உருவாக்குதல் தொடர்பாக, உறுப்பினர் கேள்வி கேட்டிருக்கிறார். அரசாணை

(நிலை) எண் 279, வருவாய்த்துறை, நாள் 9-6-2003-ன்படி, புதிய வருவாய் வட்டம் அமைப்பதற்கான நிபந்தனைகள் பூர்த்தியாகவில்லை. எனவே, அரசு நிபந்தனைகள் பூர்த்தியாகாததால், தனி வட்டமாக அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. ஆறுக்குட்டி அவர்கள்.

திரு. வி.சி. ஆறுக்குட்டி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கருத்துகளின் கலைப் பூங்காவாக, எண்ணங்களின் வண்ணச் சோலையாக, அன்பும், பண்பும், பண்பட்ட முதிர்ச்சியும் ஒருங்கே பெற்று, அன்னைத் தமிழகத்தை வழி நடத்திய வான் புகழ்கொண்ட எங்கள் வரலாற்று அன்னையை வணங்கி, மாண்புமிகு அம்மா அவர்களுடைய வழியில் திறம்பட ஆட்சியை வழிநடத்தி பிளாஸ்டிக் இல்லாத தமிழகத்தை உருவாக்கிட அறிவிப்பு வெளியிட்ட தமிழ்நாட்டின் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனது கவுண்டம்பாளையம் தொகுதி, தமிழகத்திலேயே அதிக மக்கள்தொகையைக் கொண்ட இரண்டாவது தொகுதியாகும். ஆனைகட்டி, பெரியநாயக்கன்பாளையம், பாலமலை ஆகிய பகுதிகளிலிருந்து சான்றிதழ் பெற வேண்டுமென்றால், சுமார் 25 கிலோ மீட்டர் சென்றுதான் வாங்க வேண்டிய சூழ்நிலை உள்ளது. ஆகவே, வருங்காலத்தில் இதனை தமிழகத்தினுடைய மாண்புமிகு முதலமைச்சரின் கவனத்திற்கு எடுத்துச்சென்று, வட்டம் அமைக்க வேண்டுமாய் மாண்புமிகு அமைச்சர் அவர்களைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல், கோயம்புத்தூர் மாநகராட்சிப் பகுதியில் மக்கள்தொகை நெருக்கம் அதிகமாக உள்ளது. மாநகராட்சி எல்லையை ஒட்டி அமைந்துள்ள புறநகர்ப் பகுதியான பெரியநாயக்கன்பாளையம் மற்றும் துடியலூர் உள் வட்டங்களில்

அமைந்துள்ள கிராமங்களில் மக்கள் அதிக அளவில் குடியேறத் துவங்கியுள்ளனர். அங்கே புதிய தொழிற்சாலைகள் வருகின்றன. தற்போது வட்டாட்சியர் அலுவலகம் கோயம்புத்தூர் மாநகராட்சிக்குள்ளே அமைந்துள்ளதாலும், போக்குவரத்து நெரிசலில் மிக நீண்ட தூரம் பயணம் செய்து வட்டாட்சியர் அலுவலகம் அடைவதைத் தவிர்க்கும் பொருட்டும், அங்கே புதிய வட்டம் அமைவது அவசியமாக இருக்கிறது. இருந்தபோதிலும் நம்முடைய வருவாய்த் துறையில் உருவாக்கப்பட்டிருக்கின்ற அரசாணை எண் 279-ன் அடிப்படையில் அந்த நிபந்தனைகள் பூர்த்தி ஆகாத காரணத்தினால், அங்கே புதிய வட்டம் உருவாக்குவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை. இருந்தபோதிலும், மக்கள் நலன் கருதி வருவாய்த் துறையினுடைய சேவையை மேம்படுத்துவதற்காக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முன்வைத்திருக்கின்ற கோரிக்கையின்மீதான சாத்தியக்கூறுகளை மீண்டும் ஆய்வு செய்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச்சென்று, புதிய வட்டம் அமைப்பதற்கு பரிசீலனை செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. ஆறுக்குட்டி அவர்கள்.

திரு. வி.சி. ஆறுக்குட்டி: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வருங்காலத்தில் வட்டம் அமைக்கப்படும் என்று பதிலளித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி கூறி அமர்கின்றேன். நன்றி, வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பா. ஆறுமுகம் அவர்கள்.

திரு. பா. ஆறுமுகம்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நார்த்தாமலை என்ற குக்கிராமத்தில் கல்லை உடைத்து, அதைப் பிழிந்து கஞ்சி குடித்த கடைக்கோடி தொண்டனான என்னை, தரணி போற்றும் ஊரணி உள்ளம் கொண்ட (மேசையைத் தட்டும் ஒலி) பூரணி, தங்கத் தாரகை, இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வெற்றியடையச் செய்தார்கள். அந்த இதய தெய்வம் இருக்கும் திசையை நோக்கி வணங்குகிறேன். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் ஐயா அவர்களையும், மாண்புமிகு துணை*

முதலமைச்சர் ஐயா அவர்களையும் வணங்குகின்றேன். எனது கந்தர்வக்கோட்டை தொகுதிக்கு உட்பட்ட கந்தர்வக்கோட்டை தாலுகா, கறம்பக்குடி தாலுகா இரண்டையும் இணைத்து, கந்தர்வக்கோட்டையைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு புதிய வருவாய்க் கோட்டத்தை அமைத்துக் கொடுத்தால் வசதியாக இருக்கும். ஏனென்றால் அந்தப் பகுதியில் உள்ள மக்கள் புதுக்கோட்டை செல்ல வேண்டுமென்றால், கிட்டத்தட்ட 80 கிலோ மீட்டர் செல்ல வேண்டும். கந்தர்வக்கோட்டையைத் தலைமையிடமாகக் கொண்டு அமைத்துக் கொடுத்தால், எங்கள் பகுதி மக்கள் அந்த அலுவலகம் செல்வதற்கு வசதியாக இருக்கும் என்றுகேட்டு,இந்த வருவாய்க்கோட்டத்தை கந்தர்வக்கோட்டையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அமைத்துத் தருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக பணிவோடு கேட்டு அமர்கின்றேன்.

முற்பகல் 11-05

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வருவாய்த் துறையினுடைய சேவைகளை மேம்படுத்தவும், வருவாய்த் துறையினுடைய சேவைகளை விரைவாக மக்களுக்குக் கொண்டு சேர்க்கவும், வருவாய்த் துறையை மக்கள் எளிதில் அணுகவும் முன்மாதிரியான நடவடிக்கைகளை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு எடுத்து வருகிறது. அந்த வகையில், புதிய வட்டங்கள், புதிய கோட்டங்கள் அமைப்பதற்கு அரசாணை எண் 279-ன் அடிப்படையிலே, மக்கள் தொகை, பரப்பளவு, குறிப்பிட்ட எண்ணிக்கையில் வருவாய்க் கிராமங்கள் என்கிற வரையறைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அந்த வகையில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிற கந்தர்வக்கோட்டையைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய வருவாய்க் கோட்டத்தினை உருவாக்குவதற்கான சாத்தியக்கூறுகளை ஆய்வுசெய்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று, புதிய வருவாய்க் கோட்டத்தை உருவாக்குவதற்குப் பரிசீலனை செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2018 ஜூன் 7]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. லோகநாதன் அவர்கள்.*

திரு. கோ. லோகநாதன்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்களை வாழ வைத்த தெய்வம், இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு அம்மா அவர்கள் வழியிலே தமிழகத்தில் நல்லாட்சி நடத்திக்கொண்டிருக்கின்ற மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்களையும், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அண்ணன் அவர்களையும் வணங்கி, தங்களையும் வணங்குகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கீழ்வைத்தினான்குப்பம் சட்டமன்றத் தொகுதி 2011 ஆம் ஆண்டிலே உருவாக்கப்பட்ட புதிய தனித் தொகுதியாகும். இந்தத் தொகுதி மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளது. மேலும் 73 கிராம ஊராட்சிகளை மட்டுமே உள்ளடக்கிய தொகுதியாகும். இந்தத் தொகுதி, காட்பாடி வட்டத்திலுள்ள 21 கிராம ஊராட்சிகள், அதாவது 36 வருவாய்க் கிராமங்களையும், குடியாத்தம் வட்டத்திலுள்ள 50 கிராம ஊராட்சிகளையும் உள்ளடக்கியுள்ளது.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

இந்தத் தொகுதி மக்களுடைய நலன் கருதி, கீழ்வைத்தினான்குப்பம் ஒன்றியம், கீழ்வைத்தினான்குப்பத்தை தலைமையிடமாகக் கொண்டு ஒரு புதிய வட்டம் அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாக ஒரு வட்டம் பிரிக்க பரப்பளவிலே குறைந்தளவு 250 சதுர கிலோ மீட்டர் முதல் 2,000 சதுர கிலோ மீட்டர் வரையும், மக்கள் தொகையில் குறைந்தளவு 1 இலட்சம் முதல் அதிகளவு 5 இலட்சம் வரையும், வருவாய்க் கிராமங்களின் எண்ணிக்கையில் குறைந்தளவு 30 வருவாய்க் கிராமங்களும் அமைந்திருக்க வேண்டும். அந்த வகையிலே, வருவாய்த் துறையின் வரலாற்றில் இதுவரையில் இல்லாத வகையில் இதய தெய்வம்*

புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசிலேதான்—72 புதிய வட்டங்கள் உருவாக்கிக் கொடுக்கப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, இந்த அவையிலிருக்கக்கூடிய ஒவ்வொரு மாண்புமிகு உறுப்பினருக்கும் அவரவர்களுடைய தொகுதிகளிலே புதிய வட்டங்களை உருவாக்குகிற கோரிக்கைகள் இருப்பதை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு நன்கு அறியும். இருந்தாலும்கூட, வருவாய்த் துறை அரசாணை எண் 279-ன் அடிப்படையிலே, மக்கள் தொகை, பரப்பளவு, வருவாய்க் கிராமங்களின் எண்ணிக்கை ஆகியவற்றின் அடிப்படையில் சாத்தியக்கூறுகளை ஆராய்கிறபோது, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, கேட்காமலேயே கொடுக்கிற அரசு என்கிற அடிப்படையிலே, (மேசையைத் தட்டும் ஒலி) புதிய வட்டங்களை உருவாக்கித் தந்துகொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று ஆய்வு செய்யப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 72 புதிய வட்டங்களை உருவாக்கிப் பெருமைப்படுகிற அம்மாவின் அரசு, 73-வது வட்டமாக கீழ்வைத்தினான்குப்பத்தைச் சேர்த்துக்கொள்ள வேண்டும். ஏனென்றால், கீழ்வைத்தினான்குப்பம் என்னுடைய பழைய தொகுதியாகும். ஆகையினாலே, 73-வது வட்டமாக அதை உருவாக்கி பெருமை சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு பாரபட்சமில்லாமல் இதுவரை 72 புதிய வட்டங்களைத் தோற்றுவித்து, ஒரு புதிய வரலாறு படைத்திருக்கிறது. அதனை ஒரு வெற்றி வரலாறாக மாற்றியமைப்பதற்கு 73-வது வட்டமாக கீழ்வைத்தினான்குப்பம் அமைய வேண்டுமென்று மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத்

2018 ஜூன் 7]

தலைவர் அவர்கள் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். எங்களுடைய மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியிலே இன்றைக்கு ஆட்சிச் சக்கரத்தைச் செலுத்திக்கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர், ஒரு மூத்த உறுப்பினர். அவருடைய கோரிக்கையை மாண்புமிகு முதலமைச்சர் மற்றும் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று, மிக விரைவிலே சாத்தியக்கூறுகளை ஆய்வு செய்து, புதிய வட்டமாக அதை அறிவிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற எதிர்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் பேசுகிறபோது, ‘நடைபெற்றுக் கொண்டிருப்பது மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு’ என்று சொன்னார். அவருடைய பெருந்தன்மைக்கு நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) (சிரிப்பு)

முற்பகல் 11-10

திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள், 72 புதிய வட்டங்களை உருவாக்கி, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு பெருமை படைத்துக்கொண்டிருக்கிறது என்று சொன்னார்கள். அதையே நான் திருப்பி அப்படியா சொல்கிறேன்? அம்மாவின் அரசு இன்னொரு வட்டத்தைக் கொடுத்துப் பெருமை படைக்கட்டும். இன்னொரு வட்டம் கொடுப்பதற்கும், அப்படிச் சொல்வதற்கும் என்ன ஆகிவிடப் போகிறது? (சிரிப்பு) நான் கேட்ட வட்டத்தைக் கொடுங்கள், நான் பாராட்டுகிறேன். கொடுங்கள், கொடுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்ணன் அவர்களுடைய பெருந்தன்மைக்குத்தான் நான் நன்றி சொன்னேன். அதோடு

மட்டும் அல்லாமல், இன்றைக்கு மாண்புமிகு அண்ணன் அவர்கள் புதுப் பொலிவுடன் colourful ஆக வந்திருக்கிறார். (சிரிப்பு) 'என்றும் 16' ஆக இருப்பதனுடைய இரகசியம் என்னவென்று அறிய விரும்புகிறேன். (சிரிப்பு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள்.*

மாண்புமிகு முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன் (பேரவைத் துணைத் தலைவர்): *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் 3 முறை போட்டியிட்டு, 2 முறை சட்டமன்ற உறுப்பினராகப் பணியாற்றிய அந்த ஆனைமலைப் பகுதியைத் தனி வட்டமாக பிரித்துப் புதிய வட்டம் ஒன்றை அமைக்க மாண்புமிகு அம்மா அவர்களது அரசு முன்வருமா என்று தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களின் கோரிக்கை ஏற்கெனவே உயர்மட்டக் குழுவிற்கு அனுப்பப்பட்டுள்ளது. வருவாய் நிருவாக ஆணையாளர், நில நிருவாக ஆணையாளர், நில சீர்திருத்த ஆணையாளர் ஆகியோர் கொண்ட உயர்மட்டக் குழு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்தில்தான் அமைக்கப்பட்டது. அந்தக் குழுவினால் தகுதியின் அடிப்படையில் ஏற்கெனவே அந்த ஆனைமலைப் பகுதி தேர்வு செய்யப்பட்டிருக்கிறது. உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும்கூட இதற்கான கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். சட்டமன்ற உறுப்பினரும் தொடர்ந்து அந்தக் கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். நிதிநிலை அடிப்படையில் வருகிற காலங்களில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று, நிச்சயமாக புதிய வட்டம் உருவாக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 150, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.பி.எம். மைதீன்கான், மாண்புமிகு*